# அறவழி

ஜொகூர், சா ஆ தர்மா மண்டபத்தில்
துறவி அவர்கள் ஆற்றிய
உரையின் தொகுப்பு

# அறவழி

<u>பொருளடக்கம்</u>


| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 1. | அறவழி | 1 |
| 2. | உடல் குற்றங்கள் | 3 |
| 3. | சொல் குற்றங்கள் | 6 |
| 4. | மனக்குற்றங்கள் | 10 |
| 5. | உடல் தூய்மை | 13 |
| 6. | சொல் தூய்மை | 15 |
| 7. | மனத்தூய்மை | 17 |
| 8. | ஐந்து இழப்புகள் & ஐந்து நன்மைகள் | 19 |

# அறவழி

(ஜொகூர் சாஆ தர்மா மண்டபத்தில் துறவி அவர்கள் ஆற்றிய உரையின் தொகுப்பு)

**இ**ன்று உங்களுக்கு அறம் என்றால் என்ன? அறநெறி அறிந்து வாழ்வதின் பொருள் என்ன என்பதை விளக்குகிறேன்.

திருவள்ளுவர் அறம் என்றால் என்ன என்பதை இவ்வாறு விளக்குகிறார்.

***மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்***
***ஆகுல நீர பிற***

நாம் மனத்தூய்மையோடு செய்யும் செயல்கள் யாவும் அறமே. நாம் மனத்தூய்மையோடு பேசினாலும் உடலால் செயல்கள் செய்தாலும் அவையாவும் அறமே. நம் செயல்களுக்கெல்லாம் முன்னிற்பது மனம். மனம் தூய்மையாயிருந்தால் நம்மிடம் சொல் தூய்மையிருக்கும்; உடல் தூய்மையிருக்கும். உடல் தூய்மையென்பது உடலால் செய்யும் செயல்கள். ஆகவே, மனத்தூய்மை, சொல் தூய்மை, உடல் தூய்மை என்பது அறமாகும்.

அதையே வள்ளுவர் தொடர்ந்து,

***ஆகுல நீர பிற***

எனக் கூறுகிறார். நம் மனம் தீய நோக்கத்தோடு இனிய வார்த்தைகளைப் பேசினாலும், நல்ல செயல்களை உடலால் செய்தாலும், அவை அனைத்தும் அறம் இல்லையாம். அவை வெறும் பகட்டாம். அவற்றிற்குப் பெருமையுமில்லை; புகழுமில்லை. ஏன்? மனதில் தீய நோக்கம் உள்ளது. ஆகவே, அறம் என்று சொல்லக்கூடியது, மனத்தூய்மையோடு பேசக்கூடிய குற்றமில்லாச் சொற்கள், மனத்தூய்மையோடு செய்யக்கூடிய குற்றமில்லாச் செயல்கள்.

அறநெறி அறிந்து வாழ்வதன் பொருள் என்ன? அறநெறி அறிந்து வாழ்வதன் பொருள் என்னவென்றால், அறம் எது என்று அறிந்து, இனிமேலும் மனதாலும், சொல்லாலும், உடலாலும் குற்றங்கள் செய்யாமல், குற்றம் தவிர்த்து, நல்வழி நடப்பதே அற நெறி அறிந்து வாழ்வதாகும். நாம் அறம் எது என்று அறிந்து, குற்றம் தவிர்த்து, நல்வழியில் காலடியெடுத்து நடந்தோமானால் நாம் அறநெறி அறிந்து வாழ்கிறோம் எனப் பொருள்படும்.

நாம் அறநெறி அறிந்து வாழவேண்டுமென்றால், நமக்குமனத்தூய்மை, சொல் தூய்மை, உடல் தூய்மை எவை, என்று தெரிய வேண்டும். மனக்குற்றம், சொல் குற்றம், உடல் குற்றம் எவை என்றும் தெரிய வேண்டும். அவ்வாறு

அறிந்தால்தானே நாம் இனிமேலும் மனதாலும், சொல்லாலும், உடலாலும், குற்றங்கள் செய்யாமல், மனதாலும் உடலாலும் சொல்லாலும் நன்மைகள் செய்து நல்வழியில் நடக்க முடியும். மனக்குற்றங்கள் யாவை, சொல் குற்றங்கள் யாவை, உடல் குற்றங்கள் யாவை என அறிந்தால்தானே அறநெறி தெரிந்து நடக்க முடியும். இதைப் பற்றி பகவான் புத்தர் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

பகவான் புத்தர் மனக்குற்றங்கள் யாவை, உடல் குற்றங்கள் யாவை, சொல் குற்றங்கள் யாவை, மனத்தூய்மைகள் யாவை, சொல் தூய்மைகள் யாவை, உடல் தூய்மைகள் யாவை என்பதை இவ்வாறு விளக்கியுள்ளார்.

ஒருமுறை, ஒரு கிராமத்து மக்கள் பகவான் புத்தரிடம் சென்று, “பகவான்! இங்குச் சிலர் இறந்தபின், ஏன் நரகத்தில் பிறக்கின்றார்கள்? சிலர், இறந்தபின், ஏன் தெய்வலோகத்தில் பிறக்கின்றார்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு பகவான் புத்தர் அவர்களிடம், "சிலர், இங்கு அதர்ம வழியில் நடப்பதால், இறந்தபின் நரகத்தில் பிறக்கின்றார்கள். சிலர் இங்குத் தர்மவழியில் நடப்பதால் இறந்தபின் தெய்வலோகத்தில் பிறக்கின்றார்கள்" என்று கூறினார். அதாவது பகவான் புத்தர் என்ன சொல்கிறார் என்றால், சிலர் அதர்மவழியில் நடப்பதால், இறந்தபின் நரகத்தில் பிறக்கின்றார்கள். இங்கு, அதர்மவழி என்பது அறத்தை மறந்து குற்றங்கள் செய்து வாழ்வோர் நடக்கக்கூடிய பாதையாகும். அவர்கள் அதர்மவழியில் நடப்பதால் குற்றங்கள் செய்து வாழ்வதால், அவர்கள் இறந்தபின் நரகத்தில் பிறக்கின்றார்கள். சிலர் தர்மவழியில் நடப்பதால் தெய்வலோகத்தில் பிறக்கின்றார்கள். அதாவது, சிலர் அறநெறி அறிந்து, குற்றம் தவிர்த்து, நற்செயல்கள் செய்து நல்வழியில் நடப்பதால், இறந்தபின் தெய்வலோகத்தில் பிறக்கின்றார்கள் என்று பகவான் புத்தர் சொல்கின்றார்.

இதைக் கேட்ட கிராமத்து மக்கள், “பகவான்! தாங்கள் சுருக்கமாகச் சொன்ன சொல்லின் பொருள் எங்களுக்கு விளங்கவில்லை. விளக்கிச் சொல்லுங்கள்” என்று புத்தரிடம் கேட்டார்களாம். அதற்குப் பகவான் புத்தர், “கவனமாகக் கேளுங்கள். நான் விளக்குகிறேன்' என்று கூறி தர்மவழி எது, அதர்மவழி எது என்று விளக்கிச் சொன்னார்.

"இவ்வுலகில் இரண்டு வழிகள் உண்டு. ஒன்று தர்மவழி மற்றொன்று அதர்மவழி. அதர்மவழி துன்பப் பிறப்புகளை நோக்கிப் போகும் பாதை; நரகத்தை நோக்கிப் போகும் பாதை; தர்மவழி தேவலோகத்தையும், மோட்சத்தையும் நோக்கிப் போகும் பாதை. யார் ஒருவர் அதர்மவழியில் அடியெடுத்து நடக்கின்றாரோ அவர் நரகத்தை நோக்கிப் போகின்றார்; துன்பப் பிறப்பை நோக்கிப் போகின்றார். யார் ஒருவர் தர்ம வழியில் அடியெடுத்து நடக்கின்றாரோ, அவர் தெய்வலோகத்தை நோக்கிப் போகின்றார்; மோட்சத்தை நோக்கிப் போகின்றார். அதர்மவழி என்பது மனதாலும் குற்றங்கள் செய்து,

சொல்லாலும் குற்றங்கள் செய்து, உடலாலும் குற்றங்கள் செய்து வாழ்வோரின் வாழ்க்கை ஆகும். தர்மவழி என்பது மனதாலும் குற்றங்கள் செய்யாமல், சொல்லாலும் குற்றங்கள் செய்யாமல், உடலாலும் குற்றங்கள் செய்யாமல், குற்றம் நீக்கி, நல்வழி நடப்பதே தர்மவழி ஆகும்" என்று பகவான் புத்தர் விளக்கமளித்தார்.

குற்றங்களில் உடல் குற்றம் மூன்று, சொல் குற்றங்கள் நான்கு, மனக்குற்றங்கள் மூன்று எனப்படும்.

அதர்மவழி என்பது, மனதாலும் சொல்லாலும் உடலாலும் குற்றங்கள் செய்து வாழ்வோர் நடக்கும் பாதை. குற்றங்களில் உடல் குற்றங்கள் மூன்று, சொல் குற்றங்கள் நான்கு, மனக்குற்றங்கள் மூன்று.

## 1. உடல் குற்றங்கள்

உடல் குற்றங்கள் மூன்று. எவை உடல் குற்றங்கள்? **(i) திருட்டு (ii) கொலை (iv) பிறர் மனைவியை நாடுவது**. இவை யாவும் உடலால் செய்யும் குற்றங்கள் என பகவான் புத்தர் கூறுகின்றார்.

### (i) திருட்டு

திருட்டு என்றால் என்ன? எப்பொருள் தனக்குச் சொந்தமில்லையோ, எப்பொருள் மற்றவர்களால் தனக்கு வழங்கப்படவில்லையோ, அப்பொருளை வஞ்சகத்தாலோ, சூழ்ச்சியாலோ, கட்டாயமாகவோ அடைவது திருட்டு என பகவான் புத்தர் கூறுகின்றார்.

திருவள்ளுவரும் திருட்டைக் குற்றமென இவ்வாறு விளக்குகிறார்.

***உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்***
***கள்ளத்தால் கள்வேம் எனல்***

திருவள்ளுவர் மனதால் குற்றங்களை நினைப்பதே குற்றம் என்கிறார். மனதால் கூட பிறர் பொருளை வஞ்சிப்போம் என்று நினைக்கக்கூடாதாம். அப்படி நினைத்தாலே, 'நீங்கள் குற்றங்கள் செய்துவிட்டீர்கள்" என்று திருவள்ளுவர் சொல்கிறார். ஆகவே, நாம் மனதால் கூட பிறர் பொருளை அபகரிப்போம் என்று திட்டம் போடக்கூடாது என்கிறார். ஏன்? அவ்வாறு மனதால் நினைத்தாலே குற்றம். ஆகவே, திருவள்ளுவர் திருட்டைக் குற்றம் என்று கடிந்துரைக்கிறார்.

***அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்***

அறத்தை மறந்து பிறர் பொருளை வஞ்சித்து வாழக்கூடியவன், அவன் செய்யக்கூடிய குற்றங்களாலேயே அழிவுக்கு வருவான் என்றும் திருட்டைக் குற்றம் என்றும், அதுவே அழிவைத் தரும் என்றும் கண்டிக்கிறார். திருடுவது குற்றம் என்றும் அதன் பிற்பயன் அழிவு என்றும் எச்சரிக்கிறார்.

## (ii) கொலை

கொலை என்பது உள்ளத்தில் அன்பில்லாமல், கருணையில்லாமல், கையில் ஆயுதமேந்தி, உயிரினங்களின் ரத்தத்தைச் சிந்தி, உடலிருந்து உயிரைப் போக்குவது கொலை என்று பகவான் புத்தர் சொல்கிறார்.

திருவள்ளுவரும் கொலை செய்தலைக் குற்றம் என கடிந்துரைக்கிறார்.

***தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிது ஊனுண்பான்
எங்ஙனம் ஆளும் அருள்***

தன் உடலை வளர்ப்பதற்காக இன்னொரு உடலைக் கொன்று தின்பவனின் உள்ளத்தில் அருள் இருக்கும் என்று எப்படிச் சொல்வது என்ற வள்ளுவர், கொலை செய்தலைக் குற்றம் எனக் கண்டிக்கிறார்.

*பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு*

இவ்வுலகில் பொருளைத்தேடி பாதுகாக்காதவருக்குச் செல்வம்கிட்டாது. அதை உழைத்துத் தேடி பாதுகாப்பவருக்குப் பொருள் கிட்டும்.

அதுபோல் உள்ளத்தில் அன்பில்லாமல், உயிரினங்களைக் கொன்று தின்பவருக்கு அருட்செல்வம் கிட்டாது என்றும் கொலையைக் குற்றம் என்று கூறுகிறார்.

## (iii) தவறான வகையில் காமத்தை நாடுதல்

தவறான வகையில் காமத்தை நாடுவது என்பது மற்றவர் மனைவியையோ, அல்லது தாயின் பாதுகாப்பிலுள்ள பெண்களையோ, தந்தையின் பாதுகாப்பிலுள்ள பெண்களையோ, சகோதரரின் பாதுகாப்பில் உள்ள பெண்களையோ, சகோதரியின் பாதுகாப்பில் உள்ள பெண்களையோ, அல்லது மற்றவர் பாதுகாப்பில் உள்ள பெண்களையோ, வஞ்சகத்தாலோ,

சூழ்ச்சியாலோ, பலாத்காரத்தினாலோ, சம்மதத்தாலோ, அடைவது தவறான வழியில் காமத்தை நாடுவதாகும் என பகவான் புத்தர் கூறுகிறார்.

திருவள்ளுவரும், பிறர் மனைவியை நாடுவது பெருங்குற்றம் என்றும், அக்குற்றத்தை, அறத்தை மறந்து குற்றங்கள் செய்யக்கூடிய மடையர்கள்தான் செய்வார்களாம் என்றும் கடிந்துரைக்கிறார்.

***அறன்கடை நின்றாருள எல்லாம் பிறன்கடை***
***நின்றாரின் பேதையார் இல்***

பிறன் மனைவியை மனதால் விரும்பி தீய நோக்கத்தோடு அவர் வீட்டு வாசலில் போய் நிற்கக்கூடிய ஒருவன், அறத்தை மறந்து குற்றங்கள் செய்பவர்களிலேயே பெரும் மடையன் என்று திருவள்ளுவர் கூறி, பிறன் மனைவியை நாடுவது பெருங்குற்றம் என்கிறார். அறத்தை மறந்து வாழ்பவர்களே பிறன் மனைவியை நாடுவார்கள் என்றும், இக்குற்றத்தைச் செய்பவன் அறத்தை மறந்து வாழக்கூடிய மடையர்களிலே பெரும் மடையன் என்று வள்ளுவர் பிறன் மனைவியை நாடுவது பெருங்குற்றம் என்றும் கண்டித்துள்ளார்.

***பகைபாவம் அச்சம் பழியென நான்கும்***
***இகவாவாம் இல்லிறப்பான் கண்.***

மற்றவர் மனைவியை நாடக்கூடிய ஒருவனுக்கு, நான்கு துன்பங்கள் தொடர்ந்து வருமாம். எந்த நான்கு துன்பங்கள் வரும்? முதலாவது, இவன் பலரைப் பகைத்துக் கொள்வான். இரண்டாவது, இவன் அடுத்தஉலகத்திற்குப் பாவத்தைத் தேடிக் கொள்வான். மூன்றாவது, மற்றவர்க்கு இவன் செய்யும் செயல்கள் தெரிந்து விடுமோ என்ற அச்சம் எப்போதும் இவனிடம் இருக்கும். நான்காவது, உலக மக்கள் இவன் குற்றத்தை அறிந்து இவனைத் தூற்றுவார்கள். ஆகவே, திருவள்ளுவர் பிறன் மனைவியை நாடுவது குற்றம் என்றும், இக்குற்றத்தைச் செய்வோரை பழி, பாவம், அச்சம், பகை இந்நான்கு துன்பங்களும் வருத்தும் என்கிறார்.

பகவான் புத்தர் உடலால் செய்யும் குற்றங்கள் திருட்டு, கொலை, மாற்றான் மனைவியை நாடுவது என்கிறார். வள்ளுவரும் திருடுவதும், கொலை செய்வதும், மாற்றான் மனைவியை நாடுவதும், அறத்தை மறந்து, பழிக்கு அஞ்சாமல், வாழக்கூடியவர்களே செய்வார்கள் என்று கூறி, திருட்டு, கொலை, மாற்றான் மனைவியை நாடுவது குற்றம் என்று கடிந்துரைக்கிறார்.

திருட்டும், கொலையும், தவறான வழியில் காமத்தை நாடுவதும் உடலால் செய்யும் குற்றங்கள் ஆகும். இக்குற்றங்களைச் செய்து வாழ்வோர் அதர்ம

வழியில் அடியெடுத்து நடக்கக்கூடியவர்கள். இவர்கள் நரகத்தையும் துன்பப் பிறப்புகளையும் நோக்கிப் போகிறார்கள் என பகவான் புத்தர் கூறுகிறார்.

## 2. சொல் குற்றங்கள்

சொல் குற்றங்கள் நான்கு. எவை சொல் குற்றங்கள்? அவை **(i) பொய், (ii) புறம் பேசுதல், (iii) கடிந்துரைத்தல், (iv) பயனற்ற சொல்**. இவை நான்கும் சொல் குற்றங்கள் என்று பகவான் புத்தர் கூறுகின்றார்.

### (i) பொய்

பொய் என்பது, தன் லாபத்திற்காகவோ, இன்னொருவர் லாபத்திற்காகவோ, செய்ததைச் செய்யவில்லை என்றும், பார்த்ததைப் பார்க்கவில்லை என்றும், கேட்டதைக் கேட்கவில்லை என்றும், சொன்னதைச் சொல்லவில்லை என்றும் சொல்வது பொய் ஆகும். மனமறிந்து வெட்கமில்லாமல் பொய் பேசுபவன் மற்ற குற்றங்களையும் செய்ய அஞ்சமாட்டான். நடக்காததை நடந்தது என்று கூறுபவனும் செய்யாததை செய்தேன் என்று சொல்பவனும், இருவரும் அடுத்த உலகில் ஒன்றே இருவரும் நரகத்திற்கு போவார்கள் என்று பகவான் புத்தர் கூறுகின்றார்.

வள்ளுவரும் பொய் பேசுவதைக் குற்றம் என்று இவ்வாறு விளக்கியுள்ளார்.

***தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்***
***தன்நெஞ்சே தன்னைச் சுடும்.***

அதாவது, உள்ளம் அறிந்து, மனம் அறிந்து பொய் பேச வேண்டாம். அப்படி பொய் பேசினீர்களேயானால், அதை நினைக்கும் போதெல்லாம் உள்ளம் வருந்தும். அப்படி பொய் பேசினேனே" என்று உள்ளம் வருந்தும். ஆகவே, மனமறிந்து பொய் சொல்ல வேண்டாம். எவரொருவர் மனமறிந்து பொய் சொல்கிறாரோ அக்குற்றம் அவர் உள்ளத்தையே வருத்தும்.

### (ii) புறம் பேசுதல்

அடுத்து, சொல் குற்றம் புறம் பேசுதல். புறம் பேசுவது என்பது முன் ஒன்று பேசி பின் ஒன்று பேசுவது. இங்குக் கேட்டதை அங்குப் போய் சொல்வது; அங்குக் கேட்டதை இங்கு வந்து சொல்வது. இங்குக் கேட்டதை அங்குப் போய் சொல்லி, அங்குக் கேட்டதை இங்கு வந்து சொல்லி மக்களிடத்தில் பிரிவினையையும் பகைமையையும் உண்டாக்குவது. இம்மாதிரி புறம் பேசுபவர்கள் மக்கள் ஒற்றுமையோடு வாழ்வதை விரும்புவதில்லை. அவர்கள் மக்கள் மத்தியில் கோபத்தையும், பகைமையையும் உண்டாக்கத்தான் விருப்புவார்கள். இவர்கள் விரும்புவது பிரிவினையையும் பகைமையுந்தான். இவர்கள் மக்கள் இணைந்து

வாழ்வதை விரும்புவதில்லை. ஆகவே, புறம் பேசுவதால் பலருக்குத் துன்பம் வரும் என்றும் புறம் பேசுதலைப் பாவம் என்றும் பகவான் புத்தர் சொல்கிறார்.

வள்ளுவரும் புறம் பேசுதலைக் குற்றம் என்கிறார்.

***அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே
புறனழீஇப் பொய்த்து நகை***

ஒரு மனிதருக்கு முன்னால் முகம் மலர்ந்து இனிய சொற்களைப் பேசிவிட்டு, அந்த மனிதருக்குப் பின்னால் அவரை இகழ்ந்து குறை சொல்லிப் பேசுவது அறத்தை அழித்துச் செய்யக்கூடிய குற்றம் ஆகும். முகத்துக்கு முகம், நேருக்கு நேர், இனிய வார்த்தைகள் பேசிவிட்டு, புகழ்ந்து பேசிவிட்டு, அவர் பின்னால் இன்னொருவரிடம் அவரை இகழ்ந்து, குறைசொல்லி, கேடு நினைப்பது, அறத்தை அழித்துச் செய்யக் கூடிய குற்றங்களில் பெருங்குற்றமாகும் என்று வள்ளுவர் புறம் பேசுதலைக் குற்றம் என்கிறார்.

***கண்நின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன் இன்று பின் நோக்காச் சொல்***

ஒரு மனிதனிடம் நேருக்குநேர் நின்று, கடினமான வார்த்தைகளை முகத்துக்கு முகம் பேசினாலும் பேசலாம். ஆனால், அந்த மனிதனுக்குப் பின்னால் நீ பேசும் வார்த்தைகளின் பின் விளைவுகளைச் சிந்திக்காமல் எந்த ஒரு சொல்லும் சொல்லாதே என்கிறார் திருவள்ளுவர்.

***அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்***

சிலர் அறத்தை வாயளவே புகழ்ந்து பேசுவர். அவர்கள் அறத்தை உள்ளத்தில் விரும்புவதில்லை. இவர்கள் எவ்வளவு சிறுமையான மக்கள் என்பதை இவர்கள் புறஞ்சொல்லித் திரிவதிலிருந்தே புரிந்து கொள்ளலாம் என்கிறார் வள்ளுவர். அதாவது, சிலர் அறத்தை வாயளவே புகழ்ந்து பேசுவார்கள். ஆனால், உள்ளத்தில் அதை ஒரு செல்வம் எனக்கருதி, வாழ்க்கையில், அறவழியில் நடக்கமாட்டார்கள். இம்மாதிரி மக்களைச் சிறிய மக்கள், சிறுமையானவர்கள் என வள்ளுவர் சொல்லி, இவர்களுடைய சிறுமையை இவர்கள் புறஞ் சொல்லித் திரிவதிலிருந்தே தெரிந்து கொள்ளலாம் என்று புறம் பேசுவது குற்றம் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

***பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர்***

நட்பை இனியவை கூறி மகிழ்ச்சியோடு வளர்க்க வேண்டும். ஆனால் சிலர்தன் நண்பர்களைப் பற்றியே புறம்பேசி நண்பர்களையும் பகைத்துத்

தங்களிடமிருந்து துரத்திவிடுவார்களாம். புறம் பேசுபவர்களைக் கண்டு அவன் நண்பர்களும் அவனை விட்டு விலகிக் கொள்வார்கள் என்று கூறி, புறம் பேசுவது குற்றம் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

***அறன் நோக்கி ஆற்றுங்கொல் வையம் புறன் நோக்கிப்***
***புன்சொல் உரைப்பான் பொறை***

ஒருவன் இல்லாத போது, அவனைப் பழித்துக் கூறுபவனையும் பூமி சுமக்கிறது. இவ்வாறு புறம் சொல்பவர்களையும் சுமப்பது தனக்கு அறம் என்று கருதி இப்பூமி அவர்களையும் சுமக்கின்றதா? என்று வள்ளுவர் கேட்டு புறங்கூறுவது குற்றம் எனக் கடிந்துரைக்கின்றார்.

### (iii) கடிந்துரைத்தல்

அடுத்து, சொல் குற்றம் கடிந்துரைத்தல், கடிந்துரைத்தல் என்பது கடும் சொற்களால் மற்றவர் மனம் புண்படும்படி பேசுவது; கூரிய கத்தியால் வெட்டுவதுபோல் பேசுவது, மற்றவர் மனம் நோகப்பேசுவது பலருக்கு முன் ஒருவரை அவமானப் படுத்திப் பேசுவது ஆகியவை கடிந்துரைத்தலாகும் எனப் புத்தர் கூறுகிறார்.

வள்ளுவரும் கடிந்து பேசுவதைக் குற்றம் என்று தெளிவாக விவரித்து உள்ளார்.

***யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்***
***சோகாப்பர் சொல்லிழுக்கப் பட்டு***

காக்க வேண்டியவற்றுள் எவற்றைக் காக்காவிட்டாலும் நாவையாவது காக்க வேண்டும். இல்லையேல் தவறான சொற்களைப் பேசி, பின்னால் பெரும் துன்பம் வரும் என்று நாவைக் காக்கச் சொல்கின்றார் வள்ளுவர்.

***தீயினாற் சுட்டப்புண் உள்ளாறும் ஆறாதே***
***நாவினாற் சுட்ட வடு.***

தீயினால் சுட்ட புண் உள்ளே ஆறிவிடும். அது ஆறியப்பின் நமக்கு வேதனை தருவதில்லை. ஆனால் நாவினால் சுட்டப்புண் ஆறாதாம். ஏன்? அவன் இவ்வாறு என்னை அவமானப் படுத்தினான், இவ்வாறு இகழ்ந்து பேசினான் என்று நினைக்கும் போதெல்லாம் உள்ளத்தில் வேதனை வரும். ஆகவே, உள்ளத்தைச் சுட்டப்புண் ஆறாது. எனவே, மற்றவர் மனம் புண்படும்படி பேசக்கூடாது என்று வள்ளுவர் கூறுகின்றார்.

***இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ***
***வன்சொல் வழங்கு வது.***

தன் அனுபவத்தில், ஒருவன், இனிமையான சொல் தனக்கு எவ்வளவு இன்பத்தைத் தருகிறது என்று அறிந்தும் ஏன் இவன் தன் வாயினால் பிறர் மனம் நோகப் பேச வேண்டும்? இவன் அனுபவத்தில் இனிமையான சொல் இன்பத்தைத் தருகிறது என்று அறிந்தும், மற்றவர் மனம் நோகக் கடினமான சொற்களை ஏன் பேச வேண்டும் என்று வள்ளுவர் கேட்கிறார். அனுபவத்தில் உங்களுக்கு இனிமையான சொல் எவ்வளவு இன்பத்தைத் தருகிறது என்று தெரியும். பிறகு ஏன் மற்றவர் மனம் நோக நீங்கள் கடினமான சொல்லைப் பேசுகின்றீர்கள் என்று திருவள்ளுவர் கடுஞ்சொல் உரைப்பதைக் குற்றம் என்று கூறுகின்றார்.

***இனிய உளவாக இன்னாத கூறல்***
***கனியிருப்பக் காய்கவர்ந் தற்று,***

பல இனிய சொற்கள் இருக்கும் போது, கடினமான சொற்களைப் பேசுவது, பழுத்தபழம் இருக்கும் போது அதைச் சாப்பிடாமல், காயைக் கடித்து சாப்பிடுவது போலாகும். ஆகவே, கடிந்துரைத்தலைப் பகவான் புத்தரும் வள்ளுவரும் சொல் குற்றங்கள் என்கிறார்கள்.

## (iv) பயனற்ற சொல்

அடுத்து, சொல் குற்றம், பயனற்ற சொல் என்பதாகும். அந்தச் சொல்லினால் கேட்பவருக்கு எந்த ஒரு பயனும் வருவதில்லை; பிற்பயன் எதுவும் இருப்பதில்லை; அந்தப் பேச்சில் பொருள் இருக்காது; அறம் இருக்காது; நன்மை இருக்காது.

ஆகவே, கேட்போருக்குப் பெரும் வேதனையாக இருக்கும். பெரும்பாலும் கற்றோருக்கு அந்த மாதிரி சொற்கள் வேதனையாயிருக்கும். ஏன்? அதில் பொருள் ஒன்றுமில்லை; அறம் இல்லை; தர்மம் இல்லை; நன்மை இல்லை, கருத்து இல்லை. ஆகவே, பயனற்ற சொல் பேசக் கூடாது என்று பகவான் புத்தர் கூறுகின்றார். அதைச் சொல் குற்றம் என்கிறார். திருவள்ளுவரும் பயனற்ற சொல் குற்றமென இவ்வாறு விளக்குகிறார்.

***பல்லார் முனியப் பயனில சொல்லுவான்***
***எல்லாரும் எள்ளப் படும்***

பலருக்கு முன் பயனில்லாத சொற்களைப் பேசுபவரை எல்லோரும் இகழ்வார்கள் என்று திருவள்ளுவர் கூறுகின்றார்.

***பயனில்சொல் பாராட்டு வானை மகன் எனல்***
***மக்கட் பதடி யெனல்***

நெற்பயிர்களில் சில பார்வைக்கு நெல் போல் தோன்றினாலும் உள்ளே அரிசி இருக்காது. இதைப் பதர் என்று சொல்வார்கள். பயனற்ற சொற்களைப்

பலமுறை சொல்கின்ற ஒருவனை மனிதன் என்று சொல்லக்கூடாது, மக்களில் பதர் என்று சொல்ல வேண்டும் என்று திருவள்ளுவர் கூறி, பயனற்ற சொல் பேசுவது குற்றம் என்கிறார்.

பகவான் புத்தர், பொய், கடிந்து பேசுதல், புறம் பேசுதல், பயனற்றச் சொல் ஆகியவை குற்றம் என்கிறார். திருவள்ளுவரும் இவற்றைக் குற்றம் என்றும், அறத்தை மறந்து, பழிக்கு அஞ்சாமல் வாழக் கூடியவர்களே இவற்றைச் செய்வார்கள் என்றும் கூறுகின்றார்.

பொய், கடிந்து பேசுதல், புறம் பேசுதல், பயனற்ற சொல் பேசுதல் ஆகிய இவை நான்கும் சொல் குற்றங்களாகும். இக்குற்றங்களைச் செய்து வாழ்வோர் அதர்ம வழியில் அடியெடுத்து நடக்கக் கூடியவர்கள். இவர்கள் நரகத்தையும், துன்பப் பிறப்புகளையும் நோக்கிப் போகிறார்கள் என பகவான் புத்தர் கூறுகிறார்.

## 3. மனக்குற்றங்கள்

எவை மனக் குற்றங்கள்? மனக்குற்றங்கள் மூன்று.

i. **கோபமும் பகைமையும்.**
ii. **பொறாமை**
iii. **தவறான கருத்து.**

இவை மூன்றும் மனக் குற்றங்கள் என்று புத்தர் கூறுகின்றார்.

### (i) கோபமும் பகைமையும்

கோபத்தையும் பகைமையையும், உள்ளிருந்தே கொல்லும் விரோதிகள்; உள்ளிருந்தே கொல்லும் பகைவர்கள் என்று பகவான் புத்தர் கூறுகிறார். கோபமும் பகைமையும் உள்ளிருந்தே நம்மை அழிக்குமாம். ஆகவே, "இப்பகைவர்களுக்கு மனதில் இடம் கொடுக்காதீர்கள்" என்கிறார் புத்தர். ஒரு மரம் தீ பிடித்துக் கொள்ளுமாயின், அந்தத் தீயினால் அந்த மரம் மட்டும் அழிவதில்லை. அதைச் சுற்றி இருக்கும் மற்ற மரங்களும் செடிகளும் அழிந்துவிடும். அதுபோல் கோபம் ஒருவனை ஆட்கொள்ளுமாயின், அந்தக் கோபத்தில், அவன் பெருமைப் படுவானாயின், அந்தக் கோபத்தினால் அவனுக்கும் அழிவு வரும். அவனைச் சார்ந்திருக்கும் மற்றவர்க்கும் துன்பம் வரும். ஆகவே, கோபமும் பகைமையும் துன்பத்தைத் தருவதால் அவை குற்றங்கள் எனப் பகவான் புத்தர் கூறுகின்றார்.

திருவள்ளுவரும் கோபத்தைக் குற்றமென இவ்வாறு விவரித்துள்ளார்.

***நகையும் உவகையும் கொல்லும் சினத்தின்***
***பகையும் உளவோ பிற***

கோபம் முகமலர்ச்சியையும் அழித்துவிடும்; அகமலர்ச்சியையும் அழித்து விடும். முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் அழிக்கக்கூடிய கோபத்தைவிட வேறு விரோதி மனிதனுக்கு உண்டோ? கோபம் எவ்வளவு பெரிய விரோதி. அதை ஏன் பொருள் என்று கருதி பெருமைப்பட வேண்டும்? மடையர்கள் தான் அப்படிச் செய்வார்களாம். ஏன்? முகமலர்ச்சியையும் அகமலர்ச்சியையும் அழிக்கக்கூடிய கோபத்தை ஒரு பொருள் எனக் கருதி பெருமைப்படுபவனை அறிவுடையவன் என எப்படிச் சொல்ல முடியும் எனக் கேட்டு வள்ளுவர் கோபத்தைக் குற்றமென கடிந்துரைக்கிறார்.

***தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்***
***தன்னையே கொல்லும் சினம்***

ஒரு மனிதன் தன்னைக் காத்துக் கொள்ள விரும்பினால் கோபம் வராமல் பாதுகாக்க வேண்டும். அப்படி அவன் பாதுகாக்கத் தவறினால் கோபமே அவனை அழித்து விடும் என்றும் திருவள்ளுவர் சொல்கிறார்.

**(ii) பொறாமை**

அடுத்து, மனதின் குற்றம் பொறாமை. பொறாமை என்பது மற்றவர்களுக்கு வரக்கூடிய சிறப்பையும், பெருமையையும், மகிழ்ச்சியையும், செல்வத்தையும், நன்மையையும், கண்டு பொறாமைப் பட்டு அவர்களுக்குத் தீங்கு நினைப்பது எனக் கூறி பகவான் புத்தர் பொறாமையைக் குற்றம் என்கிறார்.

திருவள்ளுவரும் பொறாமையைக் குற்றமெனக் கூறி இவ்வாறு விளக்கியுள்ளார்.

***அழுக்காறு உடையார்க்கு அதுசாலும் ஒன்னார்***
***வழுக்கியும் கேடீன் பது***

உள்ளத்தில் பொறாமை உள்ளவர்களுக்கு வேறு விரோதி தேவையில்லை. இவனுடைய விரோதிகள் இவனுக்குத் தீங்கு செய்யத் தவறினாலும் இவன் மனதிலுள்ள பொறாமையே இவனை அழித்துவிடுமாம். இவனுக்கு வேறு பகையில்லை என்றும் இக்குற்றம் ஒரு பகைவனைப் போல் இவனை அழிக்கும் என்றும் திருவள்ளுவர் கூறுகின்றார்.

***அவ்வித்து அழுக்காறு உடையானைச் செய்யவள்***

***தவ்வையைக் காட்டி விடும்***

பொறாமை உடையவனின் செழிப்பைக் கண்டு இலட்சுமி பொறாமைப்பட்டு அவனை மூதேவியிடம் காண்பித்து ஒதுங்கி விடுவாளாம். இலட்சுமி என்பது நமக்கு வரக்கூடிய நன்மைகள். மூதேவி என்பது நமக்கு வரக்கூடிய துன்பங்கள். ஆகவே, உள்ளத்தில் பொறாமை உடையவனுக்கு நன்மைகள் குறைந்து துன்பங்கள் கூடுமெனக் கூறிய வள்ளுவர், பொறாமையைக் குற்றம் என்றும் அதனால் துன்பம் வரும் என்றும் கூறுகின்றார்.

***அழுக்காறு என ஒரு பாவி திருச்செற்றுத்***
***தீயுழி உய்த்து விடும்***

பொறாமை ஒரு மனிதனின் செல்வத்தை இங்கு அழிக்கும். அடுத்த உலகில் அவனை நரகத்துக்கும் அனுப்பும் என வள்ளுவர் கூறுகிறார்.

### (iii) தவறான கருத்து

அடுத்து, மனக்குற்றம் தவறான கருத்து. தவறான கருத்து என்ன என்பதை பகவான் புத்தர் இவ்வாறு விவரித்துள்ளார். இவ்வுலகில் சிலர் தவறான கருத்தை வைத்திருப்பார்கள். மரணத்திற்குப்பின் வாழ்க்கை தொடர்வதில்லை; அடுத்த உலகமில்லை; தெய்வலோகமில்லை; நரகலோகமில்லை மறுபிறப்பு இல்லை; நல்வினையில்லை; தீவினையில்லை; நற்செயல் செய்வதால் பலனில்லை; தானம் செய்வதில் பலனில்லை; விரதங்கள் இருப்பதில் பலனில்லை; தவவாழ்க்கை வாழ்வதில் பலனில்லை; தாய்க்குச் சேவை செய்வதில் பலனில்லை; தந்தைக்குச் சேவை செய்வதில் பலனில்லை; அடுத்த உலகத்தை அறிந்தவர் யாரும் இல்லை; அறநெறி அறிந்து தவ வாழ்க்கை வாழ்வோர் யாருமில்லை. இவை யாவும் தவறான கருத்துகள் என்கிறார் பகவான் புத்தர். நம் கருத்து தவறாக இருக்குமாயின் எண்ணங்களும் தவறு. நம் எண்ணங்கள் தவறாக இருக்குமாயின் சொற்களும் தவறு. நம் சொற்கள் தவறாக இருக்குமாயின் செயல்களும் தவறு. ஆகவே, தவறான கருத்துகளில் இருந்து தவறான எண்ணங்கள், தவறான சொற்கள், தவறான செயல்கள் வருவதால், தவறான கருத்துகளைப் பகவான் புத்தர் குற்றம் என்கிறார்.

மனதாலும் சொல்லாலும் உடலாலும் பாவங்கள் செய்து வாழ்வோர் செல்லும்வழி அதர்மவழி. இவ்வழி துன்பப் பிறப்பையும், நரகத்தையும் நோக்கி செல்லும் பாதை. இவ்வழி நடப்போர் உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் நரகத்தில் பிறப்பார்கள் என புத்தர் கூறுகின்றார். இவ்வாறு சொல்லிய பகவான் புத்தர் இப்பொழுது தர்மவழி என்னவென்று விளக்குகிறார்.

தர்மவழி என்பது மனதாலும் குற்றங்கள் செய்யாமல், சொல்லாலும் குற்றங்கள் செய்யாமல், உடலாலும் குற்றங்கள் செய்யாமல், அறநெறி அறிந்து, குற்றம் தவிர்த்து, நல்வழி நடப்போர் செல்லும் வழியாகும். இவ்வழி நடப்போரிடம் மனத்தூய்மை, சொல் தூய்மை, உடல் தூய்மை இருக்கும். இவ்வழி தெய்வலோகத்தையும் மோட்சத்தையும் நோக்கிப் போகும் பாதை என்கிறார் பகவான் புத்தர்.

தர்மவழி என்பது மனதாலும், சொல்லாலும், உடலாலும், தூய்மையுடன் வாழ்வோர் நடக்கும் பாதையாகும். தூய்மைகளில் உடல் தூய்மைகள் மூன்று, சொல் தூய்மைகள் நான்கு, மனத்தூய்மைகள் மூன்று ஆகும்.

## 1. உடல் தூய்மை

உடல் தூய்மை என்பது உடலால் செய்யும் குற்றமில்லா செயல்களாகும். எவை உடல் தூய்மை? **(i) திருடாமை (ii) கொல்லாமை (iii) தவறான வழியில் காமத்தை நாடாமை.** இவை மூன்றும் உடல் தூய்மையென பகவான் புத்தர் கூறுகின்றார்.

### (i) திருடாமை

திருடாமை என்றால் எப்பொருள் தனக்குச் சொந்தமில்லையோ, எப்பொருள் தனக்கு மற்றவர்களால் வழங்கப்படவில்லையோ, அப்பொருளை வஞ்சகத்தாலோ, சூழ்ச்சியாலோ, கட்டாயமாகவோ அடையாமல் இருப்பது திருடாமை என்பதாகும். வள்ளுவரும் திருடாமையை அறம் என இவ்வாறு விளக்குகிறார்.

***எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்தொன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு***

அதாவது, பிறரால் இகழப்படாமல் வாழ விரும்புபவன், எத்தன்மையான பொருள்களையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக் கொள்ள எண்ணாமல், நெஞ்சைக் காக்க வேண்டும் என்று வள்ளுவர் கூறுகிறார்.

### (ii) கொல்லாமை

கொல்லாமை என்பது ஆயுதங்களால் உயிரினங்களின் உடலிலிருந்து ரத்தத்தைச் சிந்தாமல், உடலிலிருந்து உயிரைப் போக்காமல் அன்போடும் கருணையோடும் உயிரினங்களை நேசிப்பதாகும்.

திருவள்ளுவரும் கொல்லாமையை அறம் எனக் கூறுகின்றார்.

***நல்லாறு எனப்படுவது யாதெனில் யாதொன்றும்***
***கொல்லாமை சூழும் நெறி***

அதாவது, நல்வழி எது என்று கேட்பின், எவ்வுயிரையும் கொல்லாமல் உயிர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதே நல்வழி என்று, கொல்லாமையை திருவள்ளுவர் அறம் என்கிறார்.

### (iii) தவறான வகையில் காமத்தை நாடாமை

தவறான வகையில் காமத்தை நாடாமை என்பது மற்றவர் மனைவியையோ அல்லது தாயின் பாதுகாப்பில் உள்ள பெண்களையோ, தந்தையின் பாதுகாப்பில் உள்ள பெண்களையோ, சகோதரரின் பாதுகாப்பில் உள்ள பெண்களையோ, சகோதரியின் பாதுகாப்பில் உள்ள பெண்களையோ, அல்லது மற்றவர் பாதுகாப்பில் உள்ள பெண்களையோ, வஞ்சகத்தாலோ, சூழ்ச்சியாலோ, பலாத்காரத்தாலோ, சம்மதத்தாலோ அடையாமல் இருப்பதாகும் என்று பகவான் புத்தர் கூறுகின்றார்.

தவறான வழியில் காமத்தை நாடாமையை திருவள்ளுவர் அறம் என இவ்வாறு விளக்குகிறார்.

***பிறன் பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து***
***அறம்பொருள் கண்டார்கண் இல்***

பிறன் மனைவியை நாடும் பேதமை, அறம் அறிந்து நல்வழி நடக்கும் நல்லோரிடம் இல்லை என்கிறார். அதாவது அறநெறி எது என்று அறிந்து நல்வழி நடப்போரிடம், பிறன் மனைவியை நாடும் குற்றம் இருக்காது.

***அறனியலான் இல்வாழ்வான் என்பான் பிறனியலான்***
***பெண்மை நயவா தவன்.***

அறநெறி அறிந்து இல்வாழ்க்கை வாழ்பவர் எவர் என்று கேட்பின், மற்றவர் மனைவியை மனதாலும் விரும்பாதவரே என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

பகவான் புத்தர், திருடாமை, கொல்லாமை, தவறான வழியில் காமத்தை நாடாமை இவை மூன்றும் உடல் தூய்மை என்கிறார். வள்ளுவரும் இவற்றை அறம் என்கிறார். இந்த அறத்தை வாழ்க்கையில் கடைபிடிப்போர் தர்ம வழியில் அடியெடுத்து நடக்கிறார்கள். இவர்கள் தெய்வலோகத்தை நோக்கிப் போகிறார்கள்.

## 2.சொல் தூய்மை

சொல் தூய்மை நான்கு. **(i) உண்மைப் பேசுவது (ii) புறம் பேசாமல் இருப்பது (iii) இனியவைக் கூறுதல், (iv) பலன் தரும் சொற்கள்**. இவை நான்கும் சொல் தூய்மை என பகவான் புத்தர் கூறுகின்றார்.

### (i) உண்மை பேசுதல்

உண்மை பேசுவது என்பது, பார்த்ததைப் பார்த்தேன் என்றும் கேட்டதைக் கேட்டேன் என்றும் செய்ததைச் செய்தேன் என்றும் சொன்னதைச் சொன்னேன் என்றும் பேசுவது உண்மை பேசுவதாகும் என்று பகவான் புத்தர் கூறுகின்றார்.

திருவள்ளுவரும் உண்மை பேசுதலை அறம் என்று கூறுகின்றார்.

***உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்***
***உள்ளத்து ளெல்லாம் உளன்***

ஒருவர் மனதாலும் பிறருக்குத் தீங்கு எண்ணாமல், உள்ளம் அறியப் பொய் சொல்லாமல் நடப்பாரேயானால், உலகம் அவரைப் போற்றும், என்று உண்மை பேசுவதின் சிறப்பைத் திருவள்ளுவர் கூறுகிறார்.

***எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்***
***பொய்யா விளக்கே விளக்கு***

வெளியில் இருளைப் போக்கக்கூடிய விளக்குகள் எல்லாம் சான்றோரின் விளக்கில்லையாம். அவர்களுக்கு உள்ளத்தின் இருளைப் போக்கும் விளக்கே விளக்காம். அப்படியாயின், உள்ளத்தின் இருளைப் போக்கக்கூடிய விளக்கு எது? உண்மை பேசுவதே!

### (ii) புறம் கூறாமை

புறம் கூறாமையை, முன் ஒன்று பேசி பின் ஒன்று பேசாமல், இங்குக் கேட்டதை அங்குப்போய் சொல்லாமல், அங்குக் கேட்டதை இங்கு வந்து சொல்லாமல் வாழும் வாழ்க்கையாம்.

இங்குக் கேட்டதை அங்குப் போய் சொல்லாமல், அங்குக் கேட்டதை இங்கு வந்து சொல்லாமல், மக்களிடத்தில் ஒற்றுமையையும் நட்புறவையும் உண்டாக்குதலாகும். இவ்வாறு புறம் பேசாதவர்கள் மக்கள் ஒற்றுமையோடு வாழ்வதை விரும்புவார்கள். அவர்கள் மக்களின் மத்தியில் அன்பையும் நட்புறவையும் உண்டாக்கத்தான் விரும்புவார்கள். ஆகவே, புறம் பேசாமை

பலருக்கு இன்பம் தரும் என்று புறம் பேசாமையை நற்செயல் என்றும் பகவான் புத்தர் கூறுகின்றார்.

திருவள்ளுவரும் புறம் கூறாமையை அறம் என்று கூறுகின்றார்.

***ஏதிலார் குற்றம்போல் தங்குற்றங் காண்கிற்பின்***
***தீதுண்டோ மன்னும் உயிர்க்கு***

அதாவது, மற்றவர்களின் குற்றங்களைத் தேடி அவர்களைத் தூற்றுவதுபோல், மனிதர்கள் ஒவ்வொருவரும் தன்குற்றங்களைத் தேடினால் இவ்வுலகில் மனிதர்களுக்கு ஏது துன்பம், என்கிறார் வள்ளுவர். ஆக, ஒவ்வொரு மனிதரும் மற்றவர்களின் குற்றங்களை எப்படி ஆர்வத்தோடு தேடுகின்றாரோ, அவ்வாறே தன்குற்றத்தைத் தேடினால், இவ்வுலகில் மனிதருக்குத் துன்பம் வராது. ஆகவே, பறம்பேசாமல் இருப்பது அறம் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

### (iii) இனியவை கூறல்

இனியவை கூறல் என்பது கடும் சொற்களை தவிர்த்து, கடும் சொற்களை இனிமேல் பேசாமல் இனிய சொற்களை பேசுவதாகும். மனதுக்கு இன்பம் தரும் சொற்களை பேசுவதாகும். காதுக்கு இனிமை தரும் சொற்களை பேசுவதாகும். கோபமில்லாத சொற்களை பேசுவதாகும். அன்பும் நன்மையும் தரும் சொற்களை இனிய வகையில் பேசுவதாகும். கேட்போரின் மனம் மகிழ பேசுவதாகும். மற்றவர் நன்மைகள் கருதி இனிய சொற்களை பேசுவதாகும்; என்று பகவான் புத்தர் கூறுகின்றார்.

திருவள்ளுவரும் இனியவை கூறலை அறம் என்று கூறுகின்றார்.

***முகத்தான் அமர்ந்து இனிது நோக்கி அகத்தானாம்***
***இன்சொ லினதே அறம்***

முகமலர்ச்சியுடன், அன்பான பார்வையோடு, மனதில் தீங்கு நினைக்காமல், பிறர் நலம் கருதி, அன்போடு பேசும் சொற்கள், அறம் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

***அல்லவை தேய அறம்பெருகும் நல்லவை***
***நாடி இனிய சொலின்***

அதாவது, பிறர் நன்மையை நாடி, இனிய சொற்கள் பேசினால், பாவங்கள் குறையும். அறம் கூடும் என்கிறார் திருவள்ளுவர்.

***சிறுமையுள் நீங்கிய இன்சொல் மறுமையும்***
***இம்மையும் இன்பந் தரும்***

ஒருவர் மனதாலும் மற்றவருக்குத் தீங்கு நினைக்காமல், இனிய சொற்களைப் பேசினால், அது அவருக்கு இப்பிறப்பிலும் அடுத்தப் பிறப்பிலும் இன்பம் தரும். என்று இனியவை கூறலின் சிறப்பைத் திருவள்ளுவர் விளக்குகின்றார்.

### (iv) பயன் தரும் சொற்கள்

புத்தர் பயன்தரும் சொற்களை இவ்வாறு கூறுகின்றார். பயன்மிக்க சொல் என்பது பயன்தரும் சொற்களைப் பேசுவதாகும்; நன்மை தரும் சொற்களைப் பேசுவதாகும்; அறம் உள்ள சொற்களைப் பேசுவதாகும்; தர்மமுள்ள சொற்களைப் பேசுவதாகும்; கேட்போருக்கு அதனால் நன்மை பயக்கும் சொற்களைப் பேசுவதாகும் என புத்தர் கூறுகின்றார்.

திருவள்ளுவரும் பயன் தரும் சொற்களைப் பேசுவது அறம் என்று கூறுகின்றார்.

***சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க***
***சொல்லிற் பயனிலாச் சொல்***

பிறருக்குப் பயன் தரும் சொற்களைப் பேச வேண்டும். நற்பயன் விளையாத, பயனில்லாத சொற்களைப் பேச வேண்டாம். என்று வள்ளுவர் சொல்கிறார்.

ஆகவே, உண்மை பேசுதல், புறம் பேசாமை, இனியவைக் கூறல், பயன்தரும் சொற்கள் பேசுதல் ஆகிய நான்கும் சொல் தூய்மை என பகவான் புத்தர் கூறுகிறார். திருவள்ளுவரும் இவற்றை அறம் என்கிறார். இந்த அறத்தை வாழ்க்கையில் கடைபிடிப்போர் தர்மவழியில் அடியெடுத்து நடக்கிறார்கள். இவர்கள் தெய்வலோகத்தை நோக்கிப் போகிறார்கள் எனப் பகவான் புத்தர் கூறுகிறார்.

## 3. மனத்தூய்மை

மனத்தூய்மை மூன்று. எவை மனத்தூய்மைகள்? **(i) கோபமின்மையும் பகைமையின்மையும் (ii) பொறாமை இன்மை (iii)** சரியான கருத்து ஆகும். இவை மூன்றும் மனத்தூய்மை என்று பகவான் புத்தர் கூறுகின்றார்.

## (i) கோபமின்மையும் பகைமையின்மையும்

பகவான் புத்தர் கோபமின்மையையும் பகைமை யின்மையையும் அறம் என்கிறார். கோபமின்மையை திருவள்ளுவரும் அறம் என்று இவ்வாறு கூறுகின்றார்.

***மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய***
***பிறத்தல் அதனான் வரும்***

யாரிடமும் கோபம் காட்டாமல், கோபத்தை மறக்க வேண்டும். ஏன்? நாம் கோபத்தை ஒரு பொருளென்று கருதி, அதில் பெருமைப் பட்டோமென்றால், அதனால் பல துன்பங்கள் நம்மை வந்து தாக்கும் என்ற வள்ளுவர், கோபத்தை மறப்பது நன்று என்கிறார்

***இணர்எரி தோய்வன்ன இன்னா செயினும்***
***புணரின் வெகுளாமை நன்று***

தீப்பந்தத்தால் நம்மை எரிப்பது போல், ஒரு மனிதன் நமக்குத் தீங்கு விளைவித்தாலும், முடிந்தால், கோபம் இல்லாமல் இருப்பதே நன்று என்று வள்ளுவர், கோபமின்மையின் சிறப்பைக் கூறுகின்றார்.

## (ii) பொறாமையின்மை

அடுத்து, பொறாமையின்மை என்பது பிறருக்கு வரும் சிறப்பையும், புகழையும் , செல்வத்தையும், பெருமையையும், நன்மையையும் கண்டு உள்ளம் மகிழ்வது ஆகும். அவர்களுக்குத் தீங்கு நினைக்காமல் நன்மை நினைப்பதாகும் என்று பகவான் புத்தர் கூறுகின்றார். திருவள்ளுவரும் பொறாமையின்மையை அறம் என்கிறார்.

***ஒழுக்காறாக் கொள்க ஒருவன்தன் நெஞ்சத்து***
***அழுக்காறு இல்லாத இயல்பு***

ஒருவன் இயல்பாகவே, மனதில் பொறாமை இல்லாமல் வாழும் பண்பைப்பெற வேண்டும். இயல்பாகவே, அந்தப் பண்பு வர வேண்டும். பிறரைக் கண்டு பொறாமைப்படாத மனம் இயல்பாகவே வரவேண்டும். அதையே வாழ்க்கை ஒழுக்க நெறியாகக் கொள்ள வேண்டும். ஆகவே, பொறாமை இல்லாத குணத்தை சிறந்த ஒழுக்க நெறி என திருவள்ளுவர் விளக்குகிறார்.

### (iii) சரியான கருத்து

அடுத்து, மனத்தூய்மை சரியான கருத்து. சரியான கருத்து என்ன என்பதை பகவான் புத்தர் இவ்வாறு விவரித்து உள்ளார். மரணத்திற்குப்பின் வாழ்க்கை தொடர்கிறது; அடுத்த உலகம் உண்டு; தெய்வலோகமுண்டு; நரகலோகமுண்டு மறுபிறப்பு உண்டு; நல்வினை உண்டு; தீவினை உண்டு; நற்செயல் செய்வதால் பலனுண்டு; தானம் செய்வதால் பலனுண்டு விரதங்கள் இருப்பதில் பலனுண்டு; தவவாழ்க்கை வாழ்வதில் பலனுண்டு தாய்க்குச் சேவை செய்வதில் பலனுண்டு; தந்தைக்குச் சேவை செய்வதில் பலன் உண்டு; அடுத்த உலகத்தை அறிந்தோர் உண்டு; அறநெறி அறிந்து தவ வாழ்க்கை வாழ்வோர் உள்ளனர். இவை யாவும் சரியான கருத்து. நம் கருத்து சரியாக இருக்குமாயின், நம் எண்ணங்களும் சரியே. நம் எண்ணங்கள் சரியாக இருக்குமாயின் சொற்களும் சரியே. நம் சொற்கள் சரியாக இருக்குமாயின் செயல்களும் சரியே. ஆகவே, சரியான கருத்துகளில் இருந்து சரியான எண்ணங்கள், சரியான சொற்கள், சரியான செயல்கள் வரும் என்று பகவான் புத்தர் கூறுகின்றார்.

எவரொருவர் மனத்தூய்மையோடும், சொல் தூய்மையோடும் உடல் தூய்மையோடும், வாழ்கின்றாரோ அவர் நடப்பது தர்மவழி எனப் பகவான் புத்தர் கூறுகின்றார். இந்த தர்மவழி தெய்வலோகத்தை நோக்கியும், மோட்சத்தை நோக்கியும் போவதால், இவர் இப்பொழுது தெய்வலோகத்தை நோக்கி அடி எடுத்து நடக்கின்றார்; மோட்சத்தை நோக்கியும் அடி எடுத்து நடக்கின்றார். இவர் தெய்வலோகத்தில் பிறக்க விரும்பினால் உடலை விட்டு உயிர் பிரிந்தப்பின் தெய்வலோகத்தில் பிறக்கலாம். இவர் அவாவை அழித்து மனதின் அறியாமையைப் போக்கி விட்டார் என்றால் மோட்சத்தையும் இவர் அடையலாம் என பகவான் புத்தர் கூறுகின்றார்.

***அதர்மவழியில் நடப்போருக்கு ஐந்து இழப்புகள் வரும் எனப் பகவான் புத்தர் கூறுகின்றார்.***

1) இவர் புகழ் இழப்பார். மக்கள் இவரின் குற்றங்களைக் கண்டு இவரைக் குறை சொல்லி இகழ்ந்து பேசுவர்.

2) இவர் பொருள் இழப்பார். இவர் தவறான வழியில் தேடிய பொருள், மற்றவர் அழ அழச் சேர்த்த பொருள், ஆரம்பத்தில் வளர்வது போல் தோன்றினாலும், காலத்தில் இவர் அழ அழ இவரை விட்டுப் போய்விடும்.

3) இவரின் உள்ளத்தில் அச்சம் இருக்கும். தன் குற்றங்கள் மற்றவர்களுக்குத் தெரிந்து விடுமோ என்ற அச்சம் இவர் உள்ளத்தில் எப்போதும் இருக்கும். எங்கெல்லாம் மக்கள் கூடியிருக்கின்றார்களோ, அங்கெல்லாம் இவர் போனால், உள்ளத்தில் பயம் எழும். அங்கு சிலர்கூடி பேசினால்,

அதைக்கண்டு இவர் மனதில் அச்சம் எழுமாம். "என் குறைகளைப் பற்றி பேசுகிறார்களோ, அவர்களுக்கு என் குற்றம் தெரியுமோ' என்ற பயம் எப்போதும் உள்ளத்தில் இருக்குமாம்.

4) மரணம் வரும்பொழுது இவர் செய்த குற்றங்கள் இவர்முன் வந்து நிற்கும். அதைக்கண்டு பயந்து, உள்ளம் நடுங்கி, அறிவிழந்து குழப்பத்தோடு இறப்பார்.

5) உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் நரகத்திலோ, பேயாகவோ, மிருகமாகவோ பிறப்பார்.

ஆகவே, மனதாலும் சொல்லாலும் உடலாலும் குற்றங்கள் செய்து வாழ்வோருக்கு இந்த ஐந்து இழப்புகளும் வரும்.

***தர்ம வழியில் நடப்போருக்கு ஐந்து நன்மைகள் வரும். எனப் பகவான் புத்தர் கூறுகின்றார்.***

(1) இவருக்குப் புகழ் வரும். இவர் அறவழியில் நடப்பதால், மக்கள் இவரின் அறத்தையும் பண்பையும் ஒழுக்கத்தையும் பாராட்டிப் புகழ்ந்து பேசுவார்கள்.

(2) இவருக்குச் செல்வம் கிட்டும். இவர் அறநெறி அறிந்து தேடிய பொருள், இவருக்கும் உதவும். இவருடைய பிள்ளைகளுக்கும் உதவும். இவருடைய பரம்பரைக்கும் நிலைத்து நிற்குமாம்.

(3) இவர் உள்ளத்தில் அச்சம் இருக்காது. எங்கெல்லாம் மக்கள் கூடியிருக்கிறார்களோ அங்கெல்லாம் இவர் உள்ளத்தில் அச்சமில்லாமல் இவருடைய உள்ளத்தில் அச்சம் எழாது.

(4) மரணம் வரும்போது இவர் உள்ளத்தில் அச்சம் எழாது; மனதில் குழப்பம் எழாது; மகிழ்ச்சி வரும். அமைதியாக இறப்பார்.

(5) உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் இவர் தெய்வலோகத்தில் பிறப்பார்.

ஆகவே, மனதாலும் சொல்லாலும் உடலாலும் தூய்மையுடன் வாழ்வோருக்கு இந்த ஐந்து நன்மைகளும் வரும்.

அறத்தை மறந்து குற்றம் செய்து வாழும் ஒரு மனிதன், தன் குற்றங்களுக்காகக் கொஞ்சமும் வருத்தப்படாமல், வெட்கப்படாமல், நாணாமல், தன் குற்றங்களை மிகக் கெட்டிக்காரத்தனமாக மூடி மறைத்து, மக்கள் மத்தியில் நல்லவன் போல் நடந்து கொள்ளலாம். இவ்வாறு நல்லவன் போல் நடந்து

கொள்ளும் ஒருவன், ஆலயம் சென்று பலருக்கு முன்னால், பல சடங்குகள் செய்து இறைவனைப் பிராத்தனை செய்தபோதிலும், இவனுடைய மனதிற்கும் வாய்க்கும் ஒற்றுமை இல்லாததால், உண்மையில் இவன் செய்யும் பிராத்தனை இவன் மனமறிந்து சொல்லும் பொய். ஏன்? இவன் குற்றங்களை இறைவன் அறிவார்.

இதைத்தான் திருவள்ளுவரும் இவ்வாறு கூறுகின்றார்,

***வானுயர் தோற்றம் எவன் செய்யும் தன் நெஞ்சம்***
***தான் அறி குற்றப் படின்***

இன்னொரு மனிதன் அவன் வாழ்வது குடிசையாக இருந்த போதிலும், தான் செய்த குற்றத்திற்காக மனம் வருந்தி, வேதனைப்பட்டு, வெட்கி, நாணி அக்குடிசையிலேயே மண்டியிட்டு இறைவனிடம் மன்னிப்புக்கோரி, போதும் இதுவரை செய்த பாவங்கள்; இனிமேலும் பாவங்கள் செய்வதில்லை, என உறுதி பூண்டு, குற்றங்கள் நீக்கி அறவழியில் நடந்தாரே என்றால், அந்த மனிதரின் வாழ்க்கை, கரிய மேகங்களுக்குப் பின்னால் மறைந்திருந்த நிலா வெளியே வரும்போது எப்படி அழகாக பிரகாசிக்கின்றதோ, அவ்வாறு அவரின் வாழ்வும் பிரகாசமாக அமையும். அது குடிசையாக இருந்த போதிலும், அங்கு இறைவன் இருப்பார்.

தொடர்ந்து திருவள்ளுவர் அறத்துடன் வாழ வேண்டும் என்பதை இவ்வாறு கூறுகின்றார்.

***மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்***
***பழித்தது ஒழித்து விடின்***

அதாவது, மழித்தலும் நீட்டலும் வேண்டாம் என்றால், தலையை மொட்டை அடிப்பதும், தலையில் நீண்ட முடியை வளர்த்துக் கொள்வதும் தேவையில்லை. மனம் மாசுபட்டு, அசுத்தப்பட்டு இருக்கும்போது, எதற்காக வெளிச்சடங்குகள். அதனால் பயனில்லை. உலகம் எதைச் செய்யக்கூடாது என்று சொன்னதோ அதைச் செய்யாதே! அதுபோதும், நீ தெய்வலோகம் போகலாம்; மோட்சத்திற்குப் போகலாம் என்கிறார் திருவள்ளுவர்.

இங்கு உலகம் என்பது சான்றோர்களையும் அறவோர்களையும் குறிக்கும். புத்தர், வள்ளுவர் போன்ற அறவோர்கள் சொன்ன அறத்தைக் கடைப் பிடித்து வாழ்ந்தால் இவ்வுலகிலும் இன்பம் வரும்; அடுத்த உலகிலும் இன்பம் வரும். மனித வாழ்க்கை மிகவும் குறுகியது.

இந்தக் குறுகிய வாழ்க்கையில் நாம் அதிகப்பட்சம் வாழக்கூடியது ஒரு நூற்றாண்டுதான். இந்தக் குறுகிய வாழ்க்கையில் மக்கள் எதைச் செய்ய வேண்டும்? இக்குறுகிய காலத்தில் மக்கள் செய்ய வேண்டியது அறம்தான் என்று வள்ளுவர் கூறுகின்றார்.

***செயற்பால தோரும் அறனே ஒருவற்கு***
***உயற்பால தோரும் பழி***

மனிதர்கள் வாழ்க்கையில் செய்ய வேண்டியது அறம்தான். அறம் செய்ய வேண்டும் என்றால் என்ன? அறநெறி அறிந்து, குற்றங்கள் தவிர்த்து வாழ வேண்டும். அறநெறி அறிந்து வாழ வேண்டும் என்றால் என்ன? தர்ம வழியில் காலெடுத்து நடக்க வேண்டும் என்பதை வள்ளுவர் விளக்குகின்றார்.

ஒரு மனிதன் எதிலிருந்து தன்னை காத்துக் கொள்ள வேண்டும்? குற்றங்கள் செய்யாமல், பழிபாவத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ள வேண்டும். எவ்வாறான குற்றங்களிலிருந்து தன்னைக் காக்க வேண்டும்? அறத்தை மறந்து குற்றம் செய்யாமல் இருக்க வேண்டும் என்று திருவள்ளுவர் கூறுகிறார்.

இதையேதான் பகவான் புத்தரும் இவ்வாறு கூறுகின்றார். இந்த குறுகிய மனித வாழ்க்கையில், அறிவிலார், குற்றங்கள் செய்து நற்செயல்கள் எதுவும் செய்யாததால், உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் நரகத்தில் பிறப்பார்கள். இந்தக் குறுகிய மனித வாழ்க்கையில், அறிவுடையோர், அறநெறி அறிந்து நற்செயல்கள் பல செய்ததால், உடலைவிட்டு உயிர் பிரிந்தபின் தெய்வலோகத்தில் பிறப்பார்கள்.

ஆகவே, நீங்கள் எல்லோரும் பகவான் புத்தரும், திருவள்ளுவரும் சொன்னது போல், அறநெறி அறிந்து குற்றம் தவிர்த்து நல்வழியில் நடந்தீர்கள் என்றால் நீங்கள் விரும்பும் இன்பத்தை இங்கும் பெறலாம் அடுத்த உலகத்திலும் பெறலாம்.

# மற்ற வெளியீடுகள்

1. அறவழி
2. தீவினையச்சம்
3. நல்வினைப்பயன்
4. கோபத்தினால் விளையும் தீமைகள்
5. இல்லற வாழ்க்கை
6. ஒழுக்கமுடைமை
7. உன் செயல்களுக்கு நீயே வாரிசு
8. மரணம்
9. அறிவுடைமை
10. இளமையில் சிந்திக்க வேண்டியவை
11. விரதம்
12. தண்டனை
13. கோபத்தை வெல்லும் வழி
14. ஓர் இளைஞனுக்கு பகவான் புத்தர் கூறிய அறிவுரை
15. மறுபிறப்பும் துன்பப் பிறப்புகளைக் கடக்கும் மார்க்கமும்
16. பொய்யான பக்தி
17. தாயும் தந்தையும்
18. மனசாட்சி இல்லாதவர்கள்
19. கருணை
20. அநாத பிண்டகர்
21. சேமவதி
22. பாவிகள்
23. நல்வாழ்வு
24. நான்கு மனைவிகள்
25. குற்றம் உணர்ந்து திருந்துதல்
26. அன்புடைமை
27. நன்றி மறந்தவர்கள்
28. அன்புடையோரும் அன்பில்லாதோரும்
29. ஒதுக்கப்பட்டவர்கள்
30. நேர்மை
31. பேராசை
32. நன்றியுடைமை
33. அடக்கமுடைமை
34. நல்லது செய்தால் நல்லது விளையும்
35. மன்னிப்பு
36. குற்றம்